செ.வெ.எண்:03 நாள்:01.08.2019

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் விவசாயப் பணிகளில் ஈடுபட்டு வரும் விவசாயிகள், தங்கள் நிதித் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், வங்கிகள் மூலம் கிசான் கிரெடிட் கார்டுகள் (உழவர் கடன் அட்டைகள்) வழங்கப்படுகின்றன. இந்த கடன் அட்டை அனைத்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

உழவர் கடன் அட்டைகளை விவசாயிகள் பயிர் சாகுபடி செய்வதற்கும், கால்நடை வளர்ப்பிற்கும், மீன் வளர்ப்பிற்கும் பெற்றுக்கொள்ளலாம். பயிர் சாகுபடி பரப்பளவு மற்றும் கால்நடை வளர்ப்பு குறித்து, மூலதனத்தின் அளவுக்கேற்ப கடன் அட்டைகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் விவசாயி ஒருவர் ஈட்டுறுதி இல்லாமல் ரூ.1.60 இலட்சம் வரையிலும், நில ஈட்டுறுதி அடிப்படையில் ரூ.3 இலட்சம் வரையிலும் கடன் பெற்றுக்கொள்ளளலாம்.

உழவர் கடன் அட்டை வழங்கும் முகாம்கள் இன்று முதல் அரியலூர் வட்டாரத்தில் பொட்டவெளி, இலுப்பையூர் கிராமங்களில் கிராம நிர்வாக அலுவலகங்களிலும், செந்துறை வட்டாரத்தில் சன்னாசிநல்லூர் கிராமத்தில் சன்னாசிநல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க அலுவலகத்திலும், அயனாத்தூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலகத்திலும், திருமானூர் வட்டாரத்தில் அழகியமணவாளன், சின்னப்பட்டாக்காடு கிராமங்களில் கிராம நிர்வாக அலுவலகங்களிலும், ஜெயங்கொண்டம் வட்டாரத்தில் இடையார், வானதிரையன்பட்டினம் கிராமங்களில் கிராம நிர்வாக அலுவலகங்களிலும், ஆண்டிமடம் வட்டாரத்தில் ஓலையூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலகத்திலும், ஆத்துக்குறிச்சி கிராமத்தில் பெரியாத்துக்குறிச்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க அலுவலகத்திலும், தா.பழூர் வட்டாரத்தில் இருகையூர், காரைக்குறிச்சி கிராமங்களில் கிராம நிர்வாக அலுவலகங்களிலும் நடைபெற உள்ளது.

மேலும் 02.08.2019 அன்று அரியலூர் வட்டாரத்தில் இராயம்புரம், சென்னிவனம் கிராமங்களில் கிராம நிர்வாக அலுவலகங்களிலும், செந்துறை வட்டாரத்தில் தளவாய் (வ), தளவாய் (தெ) கிராமங்களில் கிராம நிர்வாக அலுவலகங்களிலும், திருமானூர் வட்டாரத்தில் ஏலாக்குறிச்சி கிராமத்தில் ஏலாக்குறிச்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க அலுவலகத்திலும், காமரசவல்லி கிராமத்தில் காமரசவல்லி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க அலுவலகத்திலும், ஜெயங்கொண்டம் வட்டாரத்தில் பிலிச்சிகுழி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலகத்திலும், உடையார்பாளையம் (மேற்கு) கிராமத்தில் உடையார்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க அலுவலகத்திலும், ஆண்டிமடம் வட்டாரத்தில் ஸ்ரீராமன், ராங்கியம் கிராமங்களில் கிராம நிர்வாக அலுவலகங்களிலும், தா.பழூர் வட்டாரத்தில் வாழைக்குறிச்சி (நூலகம்), தென்கச்சிப்பெருமாள்நத்தம் கிராமங்களில் கிராம நிர்வாக அலுவலகங்களிலும், முகாம்கள் நடைபெற உள்ளது. இதனைத் தொடர்ந்து 30.08.2019 வரை (சனி, ஞாயிறு நீங்கலாக) அனைத்து வருவாய் கிராமங்களிலும் நடைபெறும் முகாம்களில், அனைத்து விவசாயிகளும் கலந்துகொண்டு பயன்பெறலாம்.

எனவே உழவர் கடன் அட்டை பெற விருப்பம் உள்ள மேற்கண்ட கிராம விவசாயிகள் முகாம்கள் நடைபெறும் இடங்களுக்கு சென்று விண்ணப்பங்களை பெற்று தங்களது ஆதார் அட்டை, வங்கி சேமிப்பு புத்தகம் மற்றும் நில ஆவணங்கள் (சிட்டா அடங்கல்) போன்ற ஆவணங்களை சமர்ப்பித்து கடன் அட்டையை பெற்று பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**